(சிரிப்பு) தொட்டப்பநாயக்கனூர், உத்தப்பநாயக்கனூர், அல்லிகுண்டம் ஆகிய 3 இடங்களிலும் இப்பொழுது ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. எனக்கு இங்கே கொடுத்திருக்கிற கணக்குப்படி 89, 969 பேர் தான் அங்கு ஜனத்தொகை. அரசினுடைய நிர்ணயப்படி 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்று நாம் வைத்திருக்கிறோம். அப்படிப் பார்க்கிறபொழுது இது சரியாக இருக்கிறது. இதற்கு மேலேயும் தேவை என்று சொன்னால் இப்பொழுது முடியாது. எதிர்காலத்திலே அதைப்பற்றி யோசிக்கலாம்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலாவது அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டும் மாண்புமிகு உறுப்பினர் ஒரு கேள்வி போட்டு தெரிந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 165, திரு. செ. பெருமாள் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

165--

ஏற்காட்டிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்குதல்

***20170-திரு. செ. பெருமாள்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஏற்காட்டிலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காட்டிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்

1994 ஏப்ரல் 4]

பேருந்து சென்றுகொண்டு இருந்தது. டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக அது நிறுத்தப்பட்டு, இன்றுவரையில் ஏற்காட்டிலிருந்து செல்லாமல், சேலத்தில் இருந்து சென்னைக்கு சென்றுகொண்டிருக்கிறது. அதனால் மீண்டும் ஏற்காடு பொது மக்களின் நலன் கருதி, ஏற்காட்டிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விடுவதற்கு அமைச்சர் மறுபரிசீலனை செய்து, விடுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து, தட எண் 434, சென்னையிலிருந்து ஏற்காட்டுக்கு 1-12-1988 முதல் 1990 டிசம்பர் மாதம் வரையிலும் இயக்கப்பட்டு வந்தது. டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக அது நிறுத்தப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கிறபொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. காரணம், அது குறைந்த அளவிலே, அங்கே மக்கள் பேருந்திலே பயணம் செல்கின்ற காரணத்தாலே வருவாய் இல்லை என்ற காரணத்தின் அடிப்படையிலே தான் அந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்காட்டிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளை இயக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்காட்டுக்கும் சேலத்திற்கும் 32 கிலோமீட்டர்தான் இருக்கிறது. நீங்கள் டவுன் பஸ்ஸிலே வந்திறங்கி, அங்கேயிருந்து சென்னைக்கு வரலாம்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது நான் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினுடைய எம்.டி.-ஐ அணுகி கேட்டபோது அங்கு டோக்கன் சிஸ்டத்தைக் கொடுத்து ஒரு 10 நபர்களுக்கு கீழே வந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்திலே செல்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். அதன்பேரிலே இப்போது அங்கிருந்து வருகின்ற மக்கள் டோக்கன்களைப் பெற்றுக்கொண்டு கீழே வரும்போது பஸ்களைப் பிடித்து சென்னைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, மீண்டும் அமைச்சர் அவர்கள் ஏற்காட்டிலிருந்து சென்னைக்கு செல்வதற்கு அந்த பஸ்களை விட்டால், அங்குள்ள மக்களுக்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அங்கு இருக்கின்ற மக்கள் எல்லாம் என்னிடத்திலே ஒரு கோரிக்கை மனுவாக அதைக் கொடுத்திருக்கின்றார்கள். 25 கிலோமீட்டர் என்பது சுலபமல்ல. ஏற்காட்டிலிருந்து பல பஸ்கள் வந்தாலும்கூட கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கிறது. அதனாலே, இந்த திருவள்ளுவர் பஸ்ஸை கொடுத்தால் சௌகரியமாக இருக்கும் என பொதுமக்கள் சொல்கின்றார்கள்.

பொதுமக்களுடைய நலனைக் கருதி மீண்டும் பரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் விடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மலைப்பகுதி என்பதை உறுப்பினர் அவர்கள் மறந்துவிடக் கூடாது. மலைப்பகுதியிலே இந்த பெரிய நீள சேஸிஸ் இருக்கின்ற பேருந்துகளை அங்கே இயங்குவது என்பது ஒரு கடினமான சூழ்நிலை. ஏறத்தாழ 32 கிலோமீட்டர் மட்டும் இயங்குவதற்கு நாம் ஏறத்தாழ 1 ½ மணி நேரம் ஆகிறது. அதிலே காலதாமதம் ஏற்படுவது மட்டுமல்ல, அங்கே பயணிகள் எவ்வளவுபேர் பயணம் செய்கிறார்கள் என்று சொன்னால் 5-ல் இருந்து 10 பேர்தான் அங்கே இருந்து பயணம் செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, சேலத்திலே நீங்கள் வந்து ரிசர்வேஷன் செய்ய வேண்டுமென்று விரும்பினால் அதற்காக 10 நபர்களுக்கு வேண்டுமானாலும் அதை ஒதுக்கித் தருவதற்கு உடனடியாக நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்புடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது ஏற்காட்டிலிருந்து திருவள்ளுவர் பஸ் வந்தால் கூட்டம் இல்லை, குறைவாக வருகிறதென்று சொன்னார்கள். பக்கத்து தொகுதியான என் தொகுதியிலே கல்வராயன்மலை இருக்கிறது, வெள்ளிமலை ஏற்காட்டுக்குப் பக்கத்திலே இருக்கிறது. வெள்ளிமலையிலிருந்து திருவள்ளுவர் பேருந்தை விட்டால் கூட்டம் அதிகமாக வரும். மக்கள் நலனை முன்னிட்டு, நிறுத்தி வைக்கப்பட்ட அந்தப் பேருந்தை வெள்ளிமலையிலிருந்து ஏற்காடு வழியாக சென்னைக்குவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைமீதே பஸ்களை இயக்கிக் கொண்டிருந்தால் சென்னைக்கு எப்போது வந்து சேருவது என்று எங்களுக்கு புரியவில்லை. மலையிலே இயக்குவதற்கு தனியாக நகரப் பேருந்துகளை வைத்திருக்கிறோம். ஆகவே நகரப் பேருந்துகளிலே தரைப் பகுதிக்கு வந்ததற்குப் பிறகு சிறந்த பேருந்துகளை சேலத்திலே இருந்து இயக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ப. சரஸ்வதி.

1994 ஏப்ரல் 4]

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தமிழகத்திலே சுற்றுலாவை மிகவும் முன்னேற்றப் பாதையிலே ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஏற்காடு சுற்றுலா மையமாக இருக்கின்ற காரணத்தால், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலேயே ஒரு சிறிய பேருந்தாக அமைத்து, ஏற்காட்டிலே சுற்றுலாப் பயணிகளும், மற்ற பொது மக்களும் நேரடியாக அங்கேயிருந்து செல்வதற்கு வசதிகளைச் செய்து தர, எதையும் பொறுத்துக்கொண்டு போக்குவரத்துக் கழகம் நஷ்டத்திலே இயங்கினாலும், திறமையோடு பணியாற்றி வரும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாமல், செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையங்களை அழகுபடுத்துவதற்கு சுற்றுலாத் துறை அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். அதற்குவேண்டிய பேருந்துகளை அவர்கள் வேண்டுமானாலும் இயக்கலாம். அவர்களும் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிறபோது, இப்போதே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். மேலும் பெரும் நஷ்டத்தை நீங்கள் உருவாக்கினால் சிறப்பான முறையில் அழகான பேருந்துகளை எங்களால் இயக்க முடியாது. சிறிய பேருந்துகளை இயக்க முடியுமா என்று கேட்டார்கள். மினி பேருந்துகளை இயக்குகின்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்காடு சுற்றுலா ஸ்தலமானது மிகவும் புகழ் பெற்றது. நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்,. மற்றுமுள்ள அமைச்சர்களுக்கும் தெரியும். அதுமட்டுமல்லாமல் அங்கே புகழ்பெற்ற பள்ளிகள் எல்லாம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக மான்ட்போர்ட் பள்ளி என்று சொன்னால் இன்றையதினம் தமிழ்நாட்டில் தெரியாதவர்கள் இல்லை, அகில இந்தியாவில் தெரியாதவர்கள் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த மாணவர்களுடைய வசதியை முன்னிட்டாவது அங்கேயிருந்து ஒரு பேருந்தை இயக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலக் கல்வி கற்றுத் தரும் மான்ட்போர்ட் பள்ளியில் வசதி படைத்தவர்களுடைய குழந்தைகள்தான் படிக்கிறார்கள். மேலைநாடுகளிலிருந்தும், வேறு மாநிலங்களிலிருந்தும் அமைச்சர் பெருமைக்களுடைய குழந்தைகள் போன்றவர்களும் அங்கே படித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே பேருந்துகளில் செல்லும் சூழ்நிலை இல்லை. அவர்கள் காரிலேகூட செல்லுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே, இதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 166, திரு. வீ. சுப்பிரமணியன் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

166--

செஞ்சியிலிருந்து விக்ரவாண்டிக்கு நகரப் பேருந்து இயக்குதல்

***23185-திரு வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விழுப்புரம் வட்டம், செஞ்சியிலிருந்து விக்ரவாண்டிக்கு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கு இடமில்லை என்று பொன்னான ஆட்சி செய்துவரும் நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். விக்ரவாண்டி தேர்வு நிலை பேரூராட்சியாக இருக்கிற காரணத்தாலும், அங்கே ஊராட்சி ஒன்றிய அலுவலகம் இருக்கிற காரணத்தாலும், அங்கே காவல் நிலையம் இருக்கிற காரணத்தாலும், சப்-ரெஜிஸ்டிரார் அலுவலகம் இருக்கிற காரணத்தாலும், மேலும் செஞ்சி ஒரு சுற்றுலா மையமாக இருக்கிற காரணத்தாலும், இதை எல்லாம் கருத்தில் கொண்டு மீண்டும் அரசு பரிசீலனை செய்து, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.